**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -

# IN THE COURT OF SESSIONS, MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | |
|---|---|---|
| **Case No.** | : | **SC No. 196/ 2019** |
| **Deposition of witness for** | : | **PW : 4** |
| **Name** | : | **திருமதி.சுகன்யா** |
| **Father's / Husband's Name** | : | |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **10.02.2025**

எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை :**

நான் தற்போது, C2 சுப்பிரமணியபுரம் காவல் நிலையத்தில் பெண் தலைமை காவலராகப் பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளைத் தெரியும். 09.11.2016 ம் தேதி C3 ss காலனி சட்டம் ஒழுங்கு காவல் நிலையத்தில், பெண் முதல் நிலை காவலராகப் பணிபுரிந்து வந்தேன். அப்போது, 19.00 மணிக்கு, காவல் நிலையத்திற்கு கிடைத்த இரகசிய தகவலின் பேரில், மதுரை டவுன், நேரு நகர், திருவள்ளுவர் நகர், Door No. 9B வீட்டில் விபச்சாரம் நடப்பதாக உதவி ஆய்வாளர் அவர்களுக்குக் கிடைத்த தகவலின் பேரில், போலிஸ் பார்ட்டிகளாகிய முதல்நிலை காவலர் 860 திரு.சசிக்குமார், பெண் முதல்நிலை காவலர் 3250 திருமதி.கவிதாகாமாட்சி ஆகியோருடன் 19.15 மணிக்கு அங்கு சென்று பார்த்த போது, எங்களைப் பார்த்தவுடன் ஓட எத்தனித்தவர்களை மடக்கிப் பிடித்து விசாரித்ததில், மதுரை டவுன் மணி

நகரம், சின்னச்சாமிபிள்ளை காம்பவுண்டு, door No.29 என்ற விலாசத்தில் வசிக்கும், கிருஷ்ணன் மகன் மகேஷ் வயது 48, என்பவரும், மதுரை டவுன், சம்பட்டிபுரத்தைச் சேர்ந்த, கண்ணன் மனைவி முத்துமயில் வயது 35, ஆகி இருவருடனும், இராஜபாளையத்தைச் சேர்ந்த, காளிமுத்து மனைவி முனீஸ்வரி வயது 37, மதுரை டவுன் சம்பட்டிபுரம், பாண்டிகோவில் தெருவைச் சேர்ந்த, துரைசிங்கம் மனைவி பார்வதி வயது 42, ஆகிய இருவரும் இவர்களுடன் இருந்தனர். முனீஸ்வரி, மற்றும் பார்வதி ஆகிய இருவரையும் அழைத்து விசாரித்ததில், அவர்கள் இருவரும் தங்கள் வறுமையின் காரணமாக, பணத்திற்காக தங்களை மகேஷ் மற்றும் முத்துமயில் ஆகிய இருவரும் வரும் நபர்களிடம் உல்லாசமாக வற்புறுத்தி இருக்கச் சொன்னதாக கூறினார்கள். பின்னர் மகேஷ் மற்றும் முத்துமயில் ஆகிய இருவரையும் 20.00 மணிக்கு அதே இடத்தில் வைத்து கைது செய்து, பின்னர் பாதிக்கப்பட்ட பெண்களான முனீஸ்வரி மற்றும் பார்வதி ஆகிய இருவரையும் ஆய்வாளர் அவர்கள் முன்னிலையில் வைத்து கைது செய்து பின்னர் 21.00 மணிக்கு நிலையம் வந்து பாரா வசம் ஒப்புவித்து, நடந்த விபரத்தை ஆய்வாளர் கேட்க நான் சொன்னேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை (எதிரிகள் தரப்பில்) :**

இந்த வழக்கில் சம்பவ இடத்திற்கு நாங்கள் சென்றது முதல் எதிரிகளைக் கைது செய்து நிலையம் கொண்டு வந்து, சிறையில் அடைக்கும் வரை நான் ஆய்வாளருக்கு உதவியாக இருந்தேன். வீடு என்று நான் சொன்னதில், அந்த வீடு தானா என்றோ, அது அவர்களுக்குச் சொந்தமானதா, வாடகை வீடா அல்லது ஒத்திக்கு எடுத்தா என்பதைக் காட்டும் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் அது பற்றி ஞாபகம் இல்லை. கைது செய்ததாகச் சொல்லப்படும் இடத்திற்கு அருகில் உள்ள பொது நிலையான சாட்சிகள் யாரையும் நாங்கள் விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல. இந்த

வழககில் வீடு என்று நான் சொன்னதில், அந்த வீட்டில் எந்த விதமான தடயங்களையும் கைப்பற்றி நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் அது பற்றி ஞாபகம் இல்லை. பாதிக்கப்பட்ட பெண்களை மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தி அவர்களின் கர்ப்பு தன்மை பற்றிய அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இந்த வழககு பொய்யாகப் போடப்பட்ட வழக்கு என்றும் அதனால் நான்அரசுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,மதுரை